(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 278]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூன் 04, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1947/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) மாத்தறை மாவட்டத்தில் திஹகொட பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள கபுதூவ நெசவுக் கைத்தொழில் நிலையக் கட்டடமும் அதன் உபகரணங்களும் தற்போது அழிவடைந்து வருகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அங்குள்ள வளங்களைப் பயன்படுத்தி மேற்படி பயிற்சி நிலையத்தை மீண்டும் சீரான நிலைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல், அந்த இடத்தை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது வேறு ஏதேனும் அலுவலொன்றுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2280/ '12

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரச பாடசாலை ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை உருவாக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் எந்த ஆண்டில் தாபிக்கப்பட்டதென்பதையும்;

(ii) நாடளாவிய ரீதியில் தாபிக்கப்பட்டுள்ள மேற்படி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து மேற்படி நிலையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள முகாமையாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி முகாமையாளர்கள் கல்வியலாளர்கள் சேவைக்கு உள்வாங்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலம் ஆசிரியர்களுக்கு தொழில்சார் பயிற்சியை பெற்றுக்கொடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்;

(ii) ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு முதல் இற்றைவரை மேற்படி நிலையங்களின் மூலமாக பயிற்சிகள் வழங்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை;

ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2356/ '12

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2008ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை அமைச்சிற்கு கிடைக்கப்பெற்ற "பத்து மாத சம்பள முற்பண" கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை வருட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பங்களில் ஒவ்வொரு வருடத்திற்காகவும் செலுத்தப்பட்ட சம்பள முற்பண கடன்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவசர பணத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கோரப்படும் மேற்படி கடன் தொகையை செலுத்துவதில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) 2011ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்றுள்ளதும் இன்றுவரை செலுத்தப்படாதுள்ளதுமான சம்பள முற்பண கடன் விண்ணப்பங்களுக்குரிய கொடுப்பனவுகளை செலுத்தி முடிக்கும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2464/ '12

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009ஆம், 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கான,

(i) அரசாங்கத்தால் கவனம் செலுத்தப்படும் பிரதான கைத்தொழில்களையும் (Thrust Industries);

(ii) மேற்குறிப்பிட்ட துறைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) ஆண்டொன்றுக்கு அத்துறைகளில் ஏற்படுத்தப்பட்ட மேலதிக தொழில் வாய்ப்புக்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு இதற்கு முன்னரும் தற்போதும் வழங்கப்பட்ட வரிச்சலுகைகள் மற்றும் ஊக்குவிப்புக்களையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு 2009 ஆம், 2010 ஆம், 2011 ஆம் மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் விதிக்கப்பட்ட வரிகளிலிருந்து பெறப்பட்ட மொத்த வருமானத்தினை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2870/ '12

5\.

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நுழைவுத் தேவைப்பாடொன்றாக கலைகள் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சை முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர், பல்கலைக்கழக அதிகாரிகளுடன் ஏதாவது கலந்துரையாடல்கள் நடைபெற்றனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அத்தகைய கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமைக்கான காரணம் என்னவென்பதையும்;

(iv) அவ்வாறெனில், நுழைவுத் தேவைப்பாடாதிய நுண்ணறிவுப் பரீட்சையை முடிவுறுத்துவது தொடர்பில் பல்கலைக்கழக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடு என்னவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தம்முடன் நல்லுறவைப் பேணும் பரீட்சார்த்திகளுக்கு விரிவுரையாளர்கள் சலுகை காட்டுகின்றனர் என்ற அடிப்படையில் நுண்ணறிவுப் பரீட்சை துஷ்பிரயோகமிக்கது என பரீட்சார்த்திகளிடமிருந்து மனுக்கள் அமைச்சிற்கோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கோ கிடைக்கப் பெற்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், இது தொடர்பில் புலனாய்வோ அல்லது விசாரணையோ ஏன் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பரீட்சையின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கு அமைச்சு முயன்றுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2982/ '12

6\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆசிரியர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாக்கும் விதத்தில் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப நிலையான சம்பளத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) கல்வி அமைச்சு உடன்பட்டுள்ளவாறு, இடைக்கால சம்பளத் திட்டத்தை நிலுவைச் சம்பளத்துடன் வழங்குவதற்கான எந்தவொரு செயல்முறையும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டுள்ள இடைக்கால சம்பளத் திட்டத்தை நிலுவைச் சம்பளத்துடன் வழங்குவதற்கு இதுவரை இயலாமற்போனமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி இடைக்கால சம்பளத் திட்டத்துக்கு அமைய ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய மொத்த நிலுவைச் சம்பளம் யாது;

(iii) சம்பளப் பிரச்சினைக்கு மேலதிகமாக ஆசிரியர் – அதிபர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான நிலையான சம்பளத் திட்டமொன்றைத் தயாரித்து இவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3071/ '12

7\.

கௌரவ அஜித் பி.பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தென் மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தென் மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் ( ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3173/ '12

8\.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சிறுவர் அபிவிருத்தி, மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையில் இடம்பெற்றுள்ள பெண்கள் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை ஆண்டு ரீதியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி குற்றச்செயல்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு துரிதமாக அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் பிடியில் சிக்கவைப்பதில் இலங்கைப் பொலிசார் அசமந்தப்போக்கை வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும்;

(iii) மேற்படி சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகங்களில் அதிகளவான எண்ணிக்கைக்கு அரசாங்கத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகள் மீதே குற்றம் சுமத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இதன் காரணமாக இவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல் போதியளவு இடம்பெறுவதில்லை என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) சம்பந்தப்பட்ட அமைச்சு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியன பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக UNICEF போன்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் இந்நாட்டில் செயற்படுகின்ற வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் பணிகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3196/ '12

9.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் மற்றும் பிற வேலைவாய்ப்புகளின் நிமித்தமும் சென்றுள்ள பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் பெண்களும் ஆண்களும் கடுமையாக துன்புற்று தற்போது அந்நாட்டில் "ஒலாயா" தடுப்பு முகாமிலும் "ஜித்தா" பாலத்திற்குக் கீழும் தங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருத்தமான தொழில் அமைவிடங்கள் கிடைக்காமை, துன்புறுத்தல்கள் மற்றும் ஊதியம் செலுத்தப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் அதற்குக் காரணமாய் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இலங்கையர்களை உடனடியாக இந் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு, நலனோம்புகை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு துரித கதியில் நடைமுறைப்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2442/ '12

10.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் வெள்ளத் தடுப்புக் கருத்திட்டமான நில்வலா கங்கை திட்டத்தின் இரண்டாம் கட்டம் தற்போது செயற்படும் நிலையில் உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நில்வலா கங்கை திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான நிதியை பெற்றுக்கொள்வது உள்நாட்டு நிதியங்களிலிருந்தா அல்லது வெளிநாட்டு நிதியங்களிலிருந்தா என்பதையும்;

(ii) அதற்கான நிதி ஏற்பாட்டை வழங்குகின்ற நிறுவனம் அல்லது நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நலன்கள் கிடைக்கப் பெறுகின்ற விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2560/ '12

11.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2006, 2007, 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை அந்த ஒவ்வொரு வருடத்தினதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெவ்வேறாக எத்தனை சதவீதம் என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வருடங்களில் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மேற்கூறிய சதவீதங்கள் அந்தத் துறையின் அபிவிருத்திக்கு போதுமானதாக காணப்படவில்லை என்பதையும்;

(ii) தற்போதைய நிலைமையின்படி சுகாதாரத் துறையின் முன்னேற்றத்துக்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையை விடக் கூடுதலான பணத்தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும்

ஏற்றுக் கொள்வாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2684/ '12

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழிநுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "தேசத்திற்கு மகுடம்" கண்காட்சியின் எண்ணக்கருவை அவர் விளக்குவாரா?,

(ஆ) (i) இற்றை வரை ஒவ்வொரு தேசத்திற்கு மகுடம் கண்காட்சியிலும் ஏற்படுத்தப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட தொழில்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இத்தொழில்கள் நிரந்தரமானவையும், ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமா என்பதையும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) (i) அனுராதபுர தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்கு உண்மையிலேயே எச்செலவுத் தலைப்பிலிருந்து பணம் செலவிடப்பட்டது என்பதையும்;

(ii) கடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்குத் தேவைப்பட்ட ஊழியம் மற்றும் சொத்துக்கள் போன்றவை எந்தவிதக் கொடுப்பனவுமின்றிப் பாவிக்கப்பட்டதா என்பதையும்; உதாரணமாக, ஆயுதப் படை ஆளணியினர் மற்றும் தொழிலாளர்கள் போன்றோரும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் போன்றவையும் செலவு ஆக்கக் கூறுகளாக மொத்த செலவுக் கணிப்பீட்டின் போது உள்ளடக்கப்பட்டிருந்தனவா என்பதையும்;

(iii) இன்றேல், குறிப்பிட்ட கண்காட்சிக்கான செலவு எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்பதையும்;

(iv) எதிர்வரும் மூன்று தேசத்திற்கு மகுடம் கண்காட்சிகளுக்கும் ஏற்படுமென எதிர்பார்க்கின்ற செலவினைத் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2791/ '12

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) தற்போது மேற்படி பயணிகள் கப்பல் சேவை,

(i) பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(ii) பேணிவரப்படுவதில்லையெனின், அது நிறுத்தப்பட்டுள்ள காலப்பகுதி யாது என்பதையும்;

(iii) நிறுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு பேணிவரப்படுவதாயின், அக்காலப்பகுதி யாது என்பதையும்;

(iv) தற்போது பேணிவரப்படுவதில்லையெனின், மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி பயணிகள் கப்பல் சேவையை பேணிவருதல் தொடர்பாக,

(i) கொள்வனவு செய்யப்பட்டுள்ள அல்லது வாடகை/குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள சொத்துக்கள் யாவை என்பதையும்;

(ii) வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கட்டடங்கள் பெறப்பட்டிருப்பின், அக்கட்டடங்கள் பெறப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) பெறப்பட்டுள்ள கட்டடங்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படுகின்ற பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கட்டடங்களுக்குரிய வாடகை ஒரே தடவையில் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) கட்டடங்களுக்கு ஒரே தடவையில் வாடகை செலுத்தப்பட்டுள்ள காலப்பகுதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3042/ '12

14.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பெரும்பாலான வைத்தியசாலைகளில் மருந்து வகைகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் தட்டுப்பாடு நிலவுவதாக பாசாங்குசெய்து மிகவும் மோசடியான முறையில் சம்பந்தப்பட்ட மருந்துகளும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இவ்விதமான கொள்வனவுக்காக 2010 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட பணத்தொகையைவிட அதிகமான பணத் தொகை 2011 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மிகவும் குறைந்த விலையில் கொள்வனவு செய்யக்கூடிய மருந்துகளும் உபகரணங்களும்கூட உயர்ந்த விலை மட்டங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மருந்துகளையும் உபகரணங்களயும் கொள்வனவுசெய்ய செலவிட்ட பணத்தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) வைத்தியசாலைகளில் மருந்துகள் மற்றும் உபகரணங்களின் தேவை தோன்றுகின்ற வேளையில் மேற்படி மருந்துகளும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்படுகின்ற கொள்கை யாதென்பதையும்;

(iii) மருந்துகளினதும் உபகரணங்களினதும் தட்டுப்பாடு தோன்றியுள்ளதாக பாசாங்குசெய்து அவற்றைக் கொள்வனவுசெய்கையில் மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3072/ '12

15.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணசபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாணசபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாணசபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் Iஆவது நிரலின் (மாகாணசபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் IIIஆவது நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பாராளுமன்ற புலமைப் பரிசிற் சபை (நீக்கம்),— 2002 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பாராளுமன்றப் புலமைப் பரிசிற் சபைச் சட்டத்தை நீக்கம் செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

### பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி 31 ஆம் திகதிய 1795/35 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.05.08ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

வெகுசன ஊடக, தகவல் அமைச்சர்,— பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 10 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2013 பெப்புருவரி 15ஆம் திகதிய 1797/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2013.05.22ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

பாதுகாப்புச் சேவைகள் ஏவல் மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— 2011.08.15 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்ட தற்பொழுதைய கணக்காய்வாளர் தலைமையதிபதியான திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்களின் சம்பளம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரவு அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. எச்.ஏ.எஸ். சமரவீர அவர்கள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட 2011.08.15 ஆம் திகதியிலிருந்து SL-04-2006 சம்பள அளவுத்திட்டத்தின் 02 ஆம் படிநிலையான ரூபா. 48,940.00 இல் நிறுவி சம்பளம் வழங்குதலும், பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துதலும் மற்றும் சம்பள அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்தலும் வேண்டுமென்றும் இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 12.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

13.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

போதிராஜாராம கல்வி மற்றும் கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

18.

இலங்கைக் கணனிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.